தமிழ் இலக்கிய வினா விடைகள் – பகுதி – 1 :- (இவ்வினா விடைகள் அனைத்தும் தேவிரா புத்தகத்தை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்டது)

1) பண்டைய காலத்தில் குகைக் கல்வெட்டுகளில் காணப்பட்ட எழுத்து பிராமி என்றும், அதில் எழுதப்பட்ட மொழி தமிழ் என்றும் கூறியவர்?

1) மு.வரதராசனார்

2) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

3) எல்லீஸ் துரை

4) கால்டுவெல்

2) 'இந்திய மொழிகளை திராவிட மொழிகள் என்றும், ஆரிய திராவிட மொழிகள் என்றும், ஆரிய மொழி என்றும் மூவையாக பாகுபாடு செய்தலே இன்று மொழி ஆராய்ச்சிக்கு பொருந்துவதாக உள்ளது' - என்று சொன்னவர்?

1) மு.வரதராசனார்

2) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

3) எல்லீஸ் துரை

4) கால்டுவெல்

3) தமிழ் மொழிகள் வடமொழியிலிருந்து வேறுபட்டவை என்று முதன் முதலில் சொன்னவர் யார்?

1) குமரிலபட்டர்

2) வில்லியம் கேரி

3) எல்லீஸ் துரை

4) கால்டுவெல்

4) தமிழ் முதலான மொழிகளுக்கு 'திராவிட மொழிக் குடும்பம்' என்று முதன் முதலில் பெயர் சூட்டியவர்?

1) மு.வரதராசனார்

2) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

3) எல்லீஸ் துரை

4) கால்டுவெல்

5) கூற்று 1 : எழுத்து வடிவமும், இலக்கிய வடிவமும் இல்லாமல் பேச்சு வழக்கில் மட்டுமே உள்ள திருந்திய திராவிட மொழிகள் துளு மற்றும் குடகு

கூற்று 2 : திருந்திய திராவிட மொழிகள் மொத்தம் 6 வகைப்படும்

1) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி

2) கூற்று 1 சரி மற்றும் கூற்று 2 தவறு

3) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு

4) கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி

6) எந்த ஆண்டு பிராகுயி மொழியானது திராவிட மொழிக் குடும்பத்தில் இணைக்கப்பட்டது?

1) 1910

2) 1911

3) 1909

4) 1915

7) குறுந்தொகை நூலில் கீழ்க்கண்ட எந்த இரு பாடல்கள் மட்டும் 9 அடி பேரலையை கொண்டது?

1) 300 மற்றும் 302

2) 307 மற்றும் 311

3) 307 மற்றும் 399

4) 300 மற்றும் 311

8) ஐங்குறுநூற்று நூலில் அந்தாதி முறையில் அமைந்துள்ள தொண்டிப்பத்து என்ற பத்தை பாடியவர் யார்?

1) ஓரம்போகியார்

2) ஓதலாந்தையார்

3) பேயனார்

4) அம்மூவனார் – (நெய்தல் திணை)

9) சங்க இலக்கியத்தில் உள்ளுறையும், இறைச்சியும் மிகுதியாக இடம் பெற்றுள்ள நூல் எது?

1) அகநானூறு

2) ஐங்குறுநூறு

3) பதிற்றுப்பத்து

4) கலித்தொகை

10) சங்க நூலில் அனைத்து பாடலும் பாடல் தொடரால் பெயர் பெற்ற நூல் எது?

1) கலித்தொகை

2) பரிபாடல்

3) பதிற்றுப்பத்து

4) ஐங்குறுநூறு

11) பாண்டிய நாட்டை சிறப்பிக்கவே பாடப்பெற்ற எட்டுத்தொகை நூல் எது?

1) கலித்தொகை – (பாண்டிய நாட்டை பற்றி கூறும் இரு நூல்கள் – கலித்தொகை & பரிபாடல்

2) பரிபாடல்

3) புறநானூறு

4) ஐங்குறுநூறு

12) உலகின் தோற்றம் குறித்து பாடப்பெற்ற எட்டுத்தொகை நூல் எது?

1) கலித்தொகை

2) பரிபாடல்

3) புறநானூறு

4) ஐங்குறுநூறு

13) ஏறுதழுவுதல் பற்றி கூறும் எட்டுத்தொகை நூல் எது?

1) கலித்தொகை

2) பரிபாடல்

3) புறநானூறு

4) ஐங்குறுநூறு

14) கூற்று 1: பாரத கதைகளை மிகுதியாக கூறும் நூல் கலித்தொகை

கூற்று 2: புராண கதைகளை மிகுதியாக கூறும் நூல் பரிபாடல்

1) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி

2) கூற்று 1 சரி மற்றும் கூற்று 2 தவறு

3) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு

4) கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி

15) பொருத்துக:

1) சேரன் - அத்தி

2) சோழன் - பனை          விடை = 2 1 3

3) பாண்டியன் - வேம்பு

16) ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே – என்று பாடியவர் யார்?

1) திருநாவுக்கரசர்

2) பரணர்

3) பொன்முடியார்

4) திரு.வி.க

17) கீழ்க்கண்ட பத்துப்பாட்டு நூலில் திணையால் வேறுபட்ட நூல் எது?

1) முல்லைப்பாட்டு

2) குறிஞ்சிப்பாட்டு

3) பட்டினப்பாலை

4) மதுரைக்காஞ்சி – (புறத்திணை வகையைச் சார்ந்தது)

18) அரண்மனை அமைப்பை பற்றிக் கூறும் பத்துப்பாட்டு நூல் எது?

1) மதுரைக்காஞ்சி

2) முல்லைப்பாட்டு – (பாசறை அமைப்பை பற்றி கூறும் நூல்)

3) பட்டினப்பாலை

4) நெடுநெல்வாடை

19) செலவழுங்கல் என்ற துறையில் அமைந்துள்ள பத்துப்பாட்டு நூல் எது?

1) மதுரைக்காஞ்சி

2) குறிஞ்சிப்பாட்டு – (அறத்தொடு நிற்றல் துறையை சார்ந்தது)

3) பட்டினப்பாலை

4) நெடுநெல்வாடை

20) பண்டைய இசைக் கருவிகளை பற்றி மிகுதியாக கூறும் நூல் எது?

1) மதுரைக்காஞ்சி

2) மலைபடுகடாம்

3) பட்டினப்பாலை

4) நெடுநெல்வாடை

21) பத்துப்பாட்டு நூலில் வீடு பேற்றிற்கு முதன்மை கொடுக்கும் நூல் எது?

1) மதுரைக்காஞ்சி

2) மலைபடுகடாம்

3) பட்டினப்பாலை

4) நெடுநெல்வாடை

22) பத்துப்பாட்டு நூலில் அகநூலாக இருந்தும் புறச்செய்திகளை மிகுதியாக கூறும் நூல் எது?

1) மதுரைக்காஞ்சி

2) மலைபடுகடாம்

3) பட்டினப்பாலை

4) நெடுநெல்வாடை

23) பத்துப்பாட்டில் வஞ்சியடி கலந்த ஆசிரியப்பா வகை சார்ந்த இரு நூல்கள் யாது?

1) மதுரைக்காஞ்சி & நெடுநெல்வாடை

2) மதுரைக்காஞ்சி & பட்டினப்பாலை

3) பட்டினப்பாலை & குறிஞ்சிப்பாட்டு

4) நெடுநெல்வாடை & பட்டினப்பாலை

24) நான்மணிக்கடிகை நூலில் எந்த இரு பாடல்கள் மற்றும் ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது?

1) 7 மற்றும் 80 பாடல்கள்

2) 13 மற்றும் 50 பாடல்கள்

3) 1 மற்றும் 100 பாடல்கள்

4) 7 மற்றும் 100 பாடல்கள்

25) இன்னா நாற்பது நூலில் கூறப்பட்டுள்ள இன்னா செயல்கள் மொத்தம் எத்தனை?

1) 160

2) 150

3) 164

4) 124

26) இனியவை நாற்பது நூலில் கூறப்பட்டுள்ள இனிய செயல்கள் மொத்தம் எத்தனை?

1) 160

2) 150

3) 164

4) 124

27) பெண்ணை இழிவுபடுத்தி நஞ்சாக கருதும் வழக்கத்தை முதன் முதலாக கூறிய பதிணெண்கீழ்க்கணக்கு நூல் எது?

1) இனியவை நாற்பது

2) இன்னா நாற்பது

3) கார் நாற்பது

4) நான்மணிக்கடிகை

28) பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களில் முல்லை திணையை மட்டும் பாடிய நூல் எது?

1) திணைமொழி ஐம்பது

2) இன்னா நாற்பது

3) கார் நாற்பது

4) ஐந்திணை ஐம்பது

29) வைப்பு முறையில் முல்லை திணையை முதலாக கொண்டு பாடப்பெற்ற பதிணெண்கீழ்க்கணக்கு நூல் எது?

1) இனியவை நாற்பது

2) திணைமாலை நூற்றைம்பது

3) கார் நாற்பது

4) ஐந்திணை ஐம்பது

30) கலிங்கத்துப்பரணி போன்ற பிற்கால நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்த நூல் எது?

1) திணைமொழி ஐம்பது

2) திணைமாலை நூற்றைம்பது

3) கார் நாற்பது

4) களவழி நாற்பது

31) பரிமேலழகர் உரையுடன் முதன் முதலாக திருக்குறளை பதிப்பித்தவர் யார்?

1) ஞானப்பிரகாசம் – (1812 ல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்தவர்)

2) இராமச்சந்திர கவிராயர்

3) இராமானுஜ கவிராயர் – (1840 ஆண்டில்)

4) பாண்டித்துரை தேவர்

32) அன்றாடம் நம் வாழ்க்கையில் செய்யும் சிறுசிறு செயல்களையும் எந்த முறையில் செய்ய வேண்டும் என்று விரிவாக கூறும் நூல் எது?

1) ஏலாதி

2) ஆசாரக்கோவை

3) பழமொழி நானூறு

4) முதுமொழிக்காஞ்சி

33) ஏலாதி நூலில் உணவு கொடுத்து ஆதரிப்போர் பெருவாழ்வு பெறுவர் – என்று எத்தனை பாடல்களில் கூறுகிறது?

1) 20 பாடல்களில்

2) 22 பாடல்களில்

3) 21 பாடல்களில்

4) 25 பாடல்களில்

34) எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற வரி கீழ்க்கண்டவற்றில் எந்த நீதிநூலில் இடம்பெற்றுள்ளது?

1) மூதுரை

2) நல்வழி

3) நீதிநெறி விளக்கம்

4) வெற்றிவேற்கை

35) மாதவியின் நலம் விரும்பி யார்?

1) வயந்தமாலை

2) கோசிகாமணி

3) தேவந்தி

4) கவுந்தியடிகள்

36) மாதவியின் முதல் கடிதத்தை கோவலனிடம் எடுத்துச் சென்றவள் யார்?

1) வயந்தமாலை

2) கோசிகாமணி

3) தேவந்தி

4) கவுந்தியடிகள்

37) சேர மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை எடுக்கும் போது அவருடன் உடன் இல்லாதவர் யார்?

1) இலங்கை மன்னன் கயவாகு

2) சோழ மன்னன் பெருநற்கிள்ளி

3) கனகவியாசர்

4) நலங்கிள்ளி

38) பூம்புகாரில் வாழ்ந்த ஏழு கற்புடைய மகளிர் பற்றி கண்ணகி கீழ்க்கண்ட எந்த காதையில் கூறுகிறாள்?

1) கானல் வரி

2) வழக்குரை காதை

3) வஞ்சின மாலை – (மதுரைக் காண்டம்)

4) ஊர்சூழ் வரி

39) பொருத்துக:

1) அம்மானை வரியில் புகழப்படுபவன் – சேரன்

2) கந்துக வரியில் புகழப்படுபவன் – பாண்டியன் விடை = 3 2 1

3) ஊசல் வரியில் புகழப்படுபவன் – சோழன்

40) ‘முதன் முதலில் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள்’ - என்று கூறியவர் யார்?

1) மு.வரதராசனார்

2) பாரதியார்

3) பாரதிதாசன்

4) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

41) பிறமொழிக் சொற்களை மிகவும் தமிழ் படுத்திய நூல் எது?

1) சிலப்பதிகாரம்

2) மணிமேகலை

3) வளையாபதி

4) கம்பராமாயணம்

42) கீழ்க்கண்ட பெண்களில் சீவகன் யாரை முதலில் மணந்தான்?

1) காந்தருவதத்தை

2) குணமாலை

3) விமலை

4) பதுமை

43) மடலேறுதல் பற்றி கூறும் காப்பிய நூல் எது?

1) வளையாபதி

2) குண்டலகேசி

3) சிலப்பதிகாரம்

4) சீவகசிந்தாமணி

44) மனத்தையும் போகத்தையும் மிகுதியாக கூறும் ஐஞ்சிறு காப்பிய நூல் எது?

1) யசோதர காப்பியம்

2) உதயணகுமார காப்பியம்

3) சூளாமணி

4) நாககுமார காப்பியம்

45) நற்காட்சி, நல்ஞானம், நல்ஒழுக்கம் - என்ற மும்மணிகளை பற்றி கூறும் ஐஞ்சிறு காப்பிய நூல் எது?

1) யசோதர காப்பியம்

2) உதயணகுமார காப்பியம்

3) சூளாமணி

4) நீலகேசி

46) ஏழுவகை நரகங்களை பற்றிக் கூறும் ஐஞ்சிறு காப்பிய நூல் எது?

1) யசோதர காப்பியம்

2) நீலகேசி

3) நாககுமார காப்பியம்

4) சூளாமணி

47) போருக்கு காரணம் பொறாமை என்று கூறும் நூல் எது?

1) நாககுமார காப்பியம்

2) நீலகேசி

3) உதயணகுமார காவியம்

4) சூளாமணி

48) சம்பந்தரும், நாவுக்கரசரும் முதன் முதலில் சந்தித்த இடம் எது?

1) திருப்புகலூர்

2) திருவோத்தூர்

3) செங்குன்றூர்

4) திருமறைக்காடு

49) சம்பந்தரின் சிவிகையை நாவுக்கரசர் தூக்கிய இடம் எது?

1) திருஏடகம்

2) திருப்பூந்துருத்தி

3) சீர்காழி

4) தருமபுரம்

50) பொருத்துக: சம்பந்தர் வாழ்க்கை கால நிகழ்வுகளை பொறுத்து பொருத்துக:

1) பால் குடித்த போது பாடிய பாடல் – ‘வாழ்க அந்தணர் வானவர் ஆணினம்’

2) கதவு திறக்க பாடிய பாடல் – ‘தோடுடைய செவியன்’ விடை = 2 3 4 1

3) மன்னன் நோய் தீர்க்க பாடிய பாடல் – ‘இரக்கம் ஒன்றிலர்’

4) புனல் வாதத்தின் போது பாடிய பாடல் – ‘மந்திரமாவது திருநீறு’

51) திருஞானசம்பந்தரை ‘திராவிட சிசு’ என்று புகழ்ந்தவர் யார்?

1) நாவுக்கரசர்

2) சுந்தரர்

3) ஆதிசங்கரர் – (சொஸ்தலிகிதம் என்ற நூலில்)

4) மாணிக்கவாசகர்

52) ‘நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்’ – என்று புகழ்ந்தவர் யார்?

1) மருள்நீக்கியார்

2) நம்பிஆருரார்

3) சேக்கிழார்

4) மாணிக்கவாசகர்

53) வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விலங்கதோன்றியவர் – என்று சம்பந்தரை புகழ்ந்தவர் யார்?

1) மருள்நீக்கியார்

2) நம்பிஆருரார்

3) சேக்கிழார்

4) மாணிக்கவாசகர்

54) திருவாசக நூலில் உள்ள 656 பாடல்களில் விருத்தப்பாக்களால் ஆன பாடல்கள் மொத்தம் எத்தனை?

1) 4 - (அகவற்பாக்களால் ஆனது)

2) 656

3) 654

4) 652

55) ‘திருவாசகம் ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துருகும்’ – என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

1) திருக்கோவை

2) நால்வர் நான்மணிமாலை

3) பிரபுலிங்க லீலை

4) திருவெம்பாவை

56) ஒரு பொருளை பல பாடலில் பாடும் பதிக மரபை முதன் முதலாக தொடங்கி வைத்தவர் யார்?

1) பெரியாழ்வார்

2) சேக்கிழார்

3) நம்பியாண்டார் நம்பி

4) காரைக்கால் அம்மையார்

57) அந்தாதி, மாலை என்ற சிற்றிலக்கிய வகையை தொடங்கி வைத்தவர் யார்?

1) நாவுக்கரசர்

2) காரைக்கால் அம்மையார்

3) நம்பியாண்டார் நம்பி

4) பரஞ்சோதி

58) கழறிற்றறிவார் – எனப்படுபவர் யார்?

1) சம்பந்தர்

2) சேக்கிழார்

3) குலசேகர ஆழ்வார்

4) சேரமான் பெருமாள் நாயனார்

59) ‘கடவுளை காண முயல்பவர்கள் பக்தர்கள்; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்; - என்று கூறும் நூல் எது?

1) தேவாரம்

2) திருவாசகம்

3) பெரியபுராணம்

4) திருவிளையாடற் புராணம்

60) ‘புராண நன்னாயகம்’ – என்று போற்றப்படுபவர் யார்?

1) உமாபதி சிவாச்சியார்

2) மாசிலாமணி தேவர்

3) குமரகுருபரர்

4) கச்சியப்ப சிவாச்சியார்

61) தலபுராணம் பாடும் மரபை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் யார்?

1) உமாபதி சிவாச்சியார்

2) மாசிலாமணி தேவர்

3) குமரகுருபரர்

4) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

62) குமரகுருபரர் பேசும் திறன் பெற்றவுடன் முதலில் பாடிய நூல் எது?

1) பண்டார மும்மணிக்கோவை – (அவர் ஞானாசிரியர் மீது பாடிய பாடல் தொகுப்பு)

2) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

3) சகலகலாவல்லி மாலை

4) கந்தர் கலிவெண்பா

63) இராமலிங்க அடிகளாரை திருவருட்பிரகாச வள்ளலார் என்று அழைத்தவர் யார்?

1) பாரதியார் - (இவரை புரட்சித்துறவி என்று கூறியவர்)

2) திகம்பரசாமியார் – (ஓர் உத்தம மனிதர் போகிறார் என்று கூறியவர்)

3) தொழுவூர் வேலாயுத முதலியார்

4) தாயுமானவர்

64) இராமலிங்க அடிகளாரின் பாடல்களை ஆறு திருமுறைகளாக வகுத்தவர் யார்?

1) சி.வை.தாமோதரம் பிள்ளை

2) தண்டபாணி தேசிகர்

3) ஆறுமுக நாவலர்

4) தொழுவூர் வேலாயுதம்

65) உபநிடத் கருத்துக்களை தமிழில் விரிவாக கூறியவர் யார்?

1) தாயுமானவர் – (அதிகமாக உபநிடத கருத்துக்களை கூறியவர்)

2) இராமலிங்க அடிகளார்

3) அருணகிரியார்

4) சிவப்பிரகாசர்

66) கிருத்துவ மதத்தை எதிர்த்து ஏசுமத நிராகரணம் என்ற நூலை எழுதியவர் யார்?

1) திரு.வி.க

2) கண்ணதாசன்

3) உமாபதி சிவம்

4) துறைமங்கலம் சிவப்பிரகாசர்

67) விக்கிரம சோழனின் தளபதி கூத்தன் காளிங்கராயனை பற்றி ஒட்டக்கூத்தர் எழுதிய நூல் எது?

1) கண்டன் அலங்காரம் – (இராசராசன் பற்றி பாடியது)

2) நாலாயிரக் கோவை – (புதுவை வள்ளல் காங்கேயன் பற்றி பாடியது)

3) தக்கயாகப்பரணி

4) அரும்பைத் தொள்ளாயிரம்

68) இக்கால அருணகிரி, தெய்வக் கவிராயர் – என்று போற்றப்படுபவர் யார்?

1) தாயுமானவர்

2) இராமலிங்க அடிகளார்

3) குணங்குடி மஸ்தான் சாகிபு

4) குமரகுருதாசர் – (பாம்பன் சுவாமிகள் - இயற்பெயர்)

69) முதலாழ்வார்கள் மூன்று பேரும் சந்தித்து கொண்ட இடம் எது?

1) திருவல்லிக்கேணி

2) திருக்கோவிலூர்

3) திருவெஃகா

4) திருவெண்ணெய்நல்லூர்

70) முதலாழ்வார்கள் மூன்று பேரும் சேர்ந்து திருமழிசையாழ்வாரை சந்தித்துக் கொண்ட இடம் எது?

1) திருவல்லிக்கேணி

2) திருக்கோவிலூர்

3) திருவெஃகா

4) திருவெண்ணெய்நல்லூர்

71) நாட்டுப்புற பாடல்களுக்கு இடம் கொடுத்து பாடிய ஆழ்வார் யார்?

1) திருமழிசையாழ்வார்

2) பெரியாழ்வார்

3) தொண்டரடி பெரியாழ்வார்

4) திருமங்கையாழ்வார்

72) திருவரங்க நாதனை கண்டு 'அமலனாதிபிரான்' என்ற பதிகத்தை பாடிய ஆழ்வார் யார்?

1) நம்மாழ்வார்

2) குலசேகரயாழ்வார்

3) கூரத்தாழ்வார்

4) திருப்பாணாழ்வார்

73) சிந்து என்ற பாவகைக்கு முதன் முதலாக இலக்கணம் சொன்ன நூல் எது?

1) தொல்காப்பியம்

2) தண்டியலங்காரம்

3) மறுமலர்ச்சி நூல்கள்

4) வீரசோழியம்

74) வாலை வாரிதி கவிஞர் கீழ்க்கண்ட புலவரில் யாரை தன்னுடன் போட்டியிடுமாறு வாதுக்கு அழைத்தார்?

1) உமறுப்புலவர்

2) கடிகை முத்துப்புலவர்

3) அப்துல்காசிம் மரைக்காயர்

4) கியவன் சேதுபதி விசயரகுநாத தேவர்

75) உமறுப்புலவர் வாலை வாரிதி புலவரை தோற்கடித்த போது அவரின் வயது யாது?

1) 11 வயது

2) 25 வயது

3) 18 வயது

4) 16 வயது

76) சீறாப்புராணம் நூல் யார் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது?

1) சீதக்காதி

2) அப்துல்காசிம் மரைக்காயர்

3) கிழவன் சேதுபதி

4) பனு அகமது மரைக்காயர்

77) நபிகள் பெருமான் மீது திருப்புகழை பாடியவர் யார்?

1) காசிம் புலவர்

2) சவ்வாது புலவர்

3) பச்சை இப்ராகிம் புலவர்

4) செய்குதம்பி பாவலர்

78) காசிம் புலவரை 'இஸ்லாமிய மதுரகவி' என்று புகழ்ந்தவர் யார்?

1) காசிம் புலவர்

2) முகைதீன் - (சவ்வாது புலவரின் இயற்பெயர்)

3) பச்சை இப்ராகிம் புலவர்

4) செய்குதம்பி பாவலர்

79) கீழ்க்கண்ட புலவர்களில் சீறாப்புராணத்திற்கு உரை எழுதிய இஸ்லாமியர் யார்?

1) காசிம் புலவர்

2) சவ்வாது புலவர்

3) பச்சை இப்ராகிம் புலவர்

4) செய்குதம்பி பாவலர் – (தமிழில் சதாவதானம் பாட ஆற்றல் பெற்ற ஒரே திறமையாளர்)

80) வசை பாடுவதில் காளமேகத்தை சார்ந்த இஸ்மாலிய புலவர் யார்?

1) முகைதீன்

2) சாகுல் அமீது

3) பச்சை இப்ராகிம் புலவர் – (இலக்கண கோடாலி என்று அழைக்கப்படுபவர்)

4) செய்குதம்பி பாவலர்

81) வீரமாமுனிவரை தைரியநாதர் என்று அழைத்தவர்கள் யார்?

1) தஞ்சை தமிழ் சங்கத்தார்

2) மதுரை தமிழ் சங்கத்தார்

3) சென்னை தமிழ் சங்கத்தார்

4) கோவை தமிழ் சங்கத்தார்

82) வீரமாமுனிவர் திருக்குறளில் எத்தனை அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்?

1) 63 அதிகாரங்கள்

2) 108 அதிகாரங்கள் - (அறத்துப்பால் மற்றும் பொருட்பால்)

3) 133 அதிகாரங்கள் - (ஜி.யூ.போப் அவர்கள்)

4) 95 அதிகாரங்கள்

83) திருக்குறளை ஏசுநாதரின் இதயஒலி, மலை உபதேசத்தின் எதிரொலி என்று புகழ்ந்தவர் யார்?

1) வீரமாமுனிவர்

2) ஜி.யூ.போப்

3) கால்டுவெல்

4) இராபர்ட்-டி-நோபிலி

84) கால்டுவெலுக்கு முன்பே தென்னிந்திய மொழிகள், தனித்தன்மை வாய்ந்தன என்று கூறியவர் யார்?

1) ஜி.யூ.போப்

2) இராபர்ட்-டி-நோபிலி

3) எல்லீஸ் துரை

4) ஜோசப் பெஸ்கி

85) ஆண்,பெண் சம உரிமையை பெற்றிருந்த நிலையை கூறும் திணை எது?

1) குறிஞ்சி

2) மருதம்

3) பாலை

4) முல்லை

86) பெண் தோல்வியுற்று ஆணுக்கு அடிமையாக்கப்பட்ட நிலையை கூறும் திணை எது?

1) முல்லை

2) நெய்தல்

3) பாலை

4) குறிஞ்சி

87) தன் பழைய நிலைக்காக பெண் போராட துணிந்ததை கூறும் திணை எது?

1) முல்லை

2) பாலை

3) நெய்தல்

4) மருதம்

88) சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை தெளிவாக கூறும் நூல் எது?

1) பாட்டியல் நூல்கள் - (சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை கூறும் நூல்)

2) பன்னிரு பாட்டியல்

3) பிரபந்த மரபியல்

4) வரையறுத்த பாட்டியல் - (சிற்றிலக்கியங்களின் வகைகளை கூறாத நூல்)

89) சிற்றிலக்கிய வகை 96 என்று முதன் முதலாக கூறிய நூல் எது?

1) வச்சணந்தி பாட்டியல்

2) பன்னிரு பாட்டியல்

3) சிதம்பர பாட்டியல்

4) பிரபந்த மரபியல்

90) பரணி சிற்றிலக்கியத்தில் காணப்படும் உறுப்புகள் மொத்தம் எத்தனை?

1) 11 உறுப்புகள்

2) 12 உறுப்புகள்

3) 13 உறுப்புகள்

4) 14 உறுப்புகள்

91) வந்த எழுத்துக்களே பொருள் வேறுபட மீண்டும் வரும் அந்தாதி எது?

1) அற்புத திருவந்தாதி

2) யமக அந்தாதி - (பாடியவர் – துறைமங்கலம் சிவப்பிரகாசர்)

3) நூற்றந்தாதி

4) பதிற்றுப்பத்தாந்தி

92) ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சந்தத்தில் பாடப்படும் அந்தாதி எது?

1) அற்புத திருவந்தாதி

2) யமக அந்தாதி

3) பல்சாந்த மாலை - (இதன் வேறு பெயர் பதிற்றுப்பத்தாந்தி)

4) நூற்றந்தாதி

93) பெண்கள் மடலேறுவதாக அமைந்த சிற்றிலக்கிய நூல் எது?

1) சிறிய திருமடல்

2) பெரிய திருமடல்

3) வருண குலாதித்தன் மடல் – (காம சுவையும், கவிச் சுவையும் மிகுந்த மடல் வகை)

4) 1 மற்றும் 2 – (திருமங்கை ஆழ்வார் எழுதியது)

94) திருமலைராயன் அவைக்கள தலைமைப்புலவரான அதிமதுரகவியை எமகண்டம் பாடி வெற்றி பெற்ற புலவர் யார்?

1) பொய்யா மொழிப்புலவர்

2) அந்தகக்கவி வீரராகவர்

3) படிக்காசுப் புலவர்

4) வரதன் - (காளமேகப்புலவரின் இயற்பெயர்)

95) ‘தமிழ் மொழி பண்டாரம்’ - என அழைக்கப்பட்டவர் யார்?

1) பொய்யா மொழிப்புலவர்

2) ஒப்பிலாமணிப் புலவர்

3) படிக்காசுப் புலவர்

4) காளமேகப் புலவர்

96) பாரதிதாசனின் பாடல்களை படிக்கின்ற அன்னியனும் தமிழனாகி விடுவான் - என்று கூறியவர்?

1) நாமக்கல் கவிஞர்

2) புதுமைப்பித்தன் – (அறிவு கோவிலை கட்டி அதில் நம்மை குடியேற்ற விரும்பும் பேரறிஞன் என்று புகழ்ந்தார்)

3) கு.ப.ரா – (பாரதிக்கு பின் தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி என்று கூறியவர்)

4) சிதம்பர செட்டியார்

97) தேசிக விநாயகம் பிள்ளை எந்த ஆண்டு கவிமணி என்ற பட்டத்தை பெற்றார்?

1) 1942

2) 1938

3) 1940 - (சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்வேள் உமாமகேஸ்வரனால் வழங்கப்பட்டது)

4) 1941

98) நாமக்கல் கவிஞரை தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக பதவியேற்ற போது தமிழக முதலமைச்சர் யார்?

1) குமாரசுவாமி இராஜா

2) காமராசர்

3) ஓமந்தூர் இராமசாமி முதலியார்

4) இராஜாஜி

99) நேரு இறந்த போது ‘தெய்வமே உம்மையாம் தேம்பி அழவையாமோ’ என்று பாடியவர் யார்?

1) நாமக்கல் கவிஞர்

2) கவிமணி

3) கண்ணதாசன்

4) சுரதா

100) பாரதிதாசனின் புரட்சிக்கவி நாடகத்தில் அமைச்சர் வேட்த்தில் நடித்தவர் யார்?

1) இராசகோபால்

2) துரைராஜ்

3) சுந்தரம் பிள்ளை

4) வாணிதாசன்